# ஸ்ரீ சிவஞானியும் சிவப்பிரகாசரும்

**ரா. மாலா**
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை, அறிவியல் கல்லூரி
மயிலம்

மலர்: 4

இதழ்: 3

மாதம்: ஜனவரி

வருடம்: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

## முன்னுரை

உலகில் பெரும்பாலான மக்கள் தெய்வ நம்பிக்கை உள்ளவர்களாக இருந்து வருகின்றனர். தெய்வநம்பிக்கை அல்லது தெய்வ உணர்வு, தெய்வ வழிபாடு ஆகியவையும் இவ்விரண்டின் சாதனமாகக் கடைப்பிடிக்கப்படுகிற ஆன்மீகக் கொள்கைகளும் இணைந்து, அவ்விணைப்பின் அடிப்படையில் உலகத்தில் பல்வேறு மதங்கள் வெகு காலத்திற்கு முன்பே தோன்றியுள்ளன. காட்சிக்கும் கருத்துக்கும் வருகிற பொருள்களைப் பற்றி ஆராயவும், அந்த ஆய்வின் விளைவாகத் தக்க முடிவு எடுக்கவும், எடுத்த முடிவைத் துணைகொண்டு வாழ்வின் பல்வேறு நிலைகளில் ஒழுங்காக நிற்கவுமுள்ள வாய்ப்பு மனிதனுக்கு மட்டும் தான் கிடைத்திருக்கிறது. அந்த வாய்ப்பினை ஏற்ற முறையில் பயன்படுத்தி நலமும் இன்பமும் பெற முயற்சிப்பவன் மனிதன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ரோம் நாட்டிலிருந்த சிசரோ என்ற அறிஞர், மனிதன் தன் அறிவு ஆற்றல் ஆராய்ச்சி என்பவற்றால் செய்ய இயலாத ஒன்று இயற்கைநிலையில் காணப்படுகிறது. இதை, மனிதனைவிடச் சிறந்த ஒன்றால்தான் தோற்றுவிக்க முடியும். அது இறைவனையன்றி வேறு எதுவாக இருக்க முடியும் என்று கூறியுள்ளார்.

## மயிலம் பொம்மபுர ஆதீனச் சிறப்புகள்

திருக்கயிலையில் சிவகணத் தலைவர் சங்குகன்னர் என்பவர் பரம்பொருளின் ஆணைவண்ணம் தென்னாட்டில் வீரசைவ சமயம் தழைத்தோங்க,ஏழாம் நூற்றாண்டில் புதுச்சேரியை அடுத்த பொம்மையபாளையம் கடற்கரையில் திருநீறு, உருத்திராக்கம், செஞ்சடை, இட்டலிங்கம் அணிந்த திருமார்புடன் இளம் வயது பாலகனாகத் தோன்றி, கள்ளிப்பாலையே உண்டு, பல சித்துக்களைச் செய்து, சிவஞானத்தைப் போதித்துப் “**பாலசித்தர்**” என அழைக்கப் பெற்றார்.

பொம்மையபாளையம், பெருமுக்கல் போன்ற மலைகளுக்கும் வனங்களுக்கும் தம் யோக வல்லமையால் உலவிச் சென்று வீரசைவக் கொள்கைகளைப் பரப்பி, பின்னர் நாரதர் அருளியவண்ணம் மயிலம் எனும் திருத்தலத்தை அடைந்து, முருகப்பெருமானை வழிபட்டார். பது மாசனத்தில் பன்னெடுங்காலம் முருகனை நோக்கித் தவம் புரிந்தார். அவரது தவத்திற்கு இரங்கி முருகப்பெருமான் வெளிப்படாதிருப்பது கண்ட தேவியர் இருவரும் சித்தருக்கு அருள்புரிய வேண்டினர். அதனால்

**"அருள்புரியும் காலம் வரையில் அமைதியாக இருப்பதனை அறியாத நீங்கள் இருவரும் எம்மைவிட்டு அகல்வீராக"** என முருகப்பெருமான் ஆணையிட்டார். முருகன்பால் ஊடல்கொண்ட தேவியர் இருவரும் சித்த கன்னியர்களாக வடிவம் கொண்டு ஸ்ரீபாலசித்தருக்கு முன் தோன்றி, எங்களைத் தங்களது மகளாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினர். ஸ்ரீ பால சித்தரும் அவ்வாறே அவர்கள் இருவரையும் மகள்களாகப் போற்றிக் காத்து வந்தார். பாலசித்தருக்கு அருள்புரியும் காலம் கனிந்து வந்த நிலையில் ஸ்ரீமுருகப்பெருமான் அரசர் வடிவத்தில் மயிலமலையை அடைந்து ஆசிரமத்தில் உட்புக முற்பட்டார். அப்பொழுது முருகனுக்கும் பாலசித்தருக்கும் போர் ஏற்பட்டது. போரில் முருகப்பெருமான் ஏவிய படைக்கருவிகள் மற்றும் வேலினை சித்தகன்னியர்கள் அருளால் ஸ்ரீபால சித்தர் தம் வசப்படுத்திக் கொண்டார். இறுதியில் இருவருக்கும் மற்போர் நடைபெற்றது. மற்போரின்போது **மெய் தீண்டல் (ஸ்பரிசதீட்சை)** ஏற்பட்டு, போரிட வந்திருப்பவர் ஸ்ரீமுருகப்பெருமானே என உணர்ந்து, வழிபட்டுத் தம்மிடம் தங்கியிருக்கும் வள்ளி, தெய்வானையரை முருகப்பெருமானுக்கு மயிலமலையில் திருமணம் செய்து கொடுத்தார். முருகப்பெருமான் மணக்கோல மாமலை முருகனாக மயிலமலையில் இன்றும் எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார். பெருமுக்கல் மலையில் தங்கியிருந்து வீரசைவ சமயத்தைப் பரப்பிவந்த போது சிதம்பரம் பச்சைக்கந்த மரபைச் சார்ந்த அம்மவை அம்மையார் என்பவர் தம் கணவருடன் ஸ்ரீபாலசித்தருக்குக் கள்ளிப்பாலை எடுத்துக் கொடுத்து சேவை புரிந்தார். அவ்வாறு சேவைபுரிந்த காரணத்தால் அம்மவை அம்மையாருக்கு ஓர் அழகிய ஆண்மகவு பிறந்தது. அக்குழந்தையும் குருவருள் பார்வையால் வளர்ந்து ஸ்ரீபாலசித்தருக்குத் தொண்டு செய்தது. பக்குவநிலையைக் குழந்தை அடைந்ததும் அதனைத் தமது சீடராக ஏற்று ஞான உபதேசம் செய்து, தமது அம்சத்திலே ஒரு அம்சம் அவரிடத்தில் பதியும்படி திருவருள்செய்து

**"நீர்பாலை உணவாகக்கொண்டு சீட பரம்பரையொடு சிவஞானபாலய தேசிகர் என வாழ்வாயாக"** என்று ஆசிர்வதித்து, **"இனி இத்திரு மடம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம் எனப் பெயர் வழங்குவதாக"** என அருள்புரிந்தார். இந்நிலையில் ஸ்ரீபாலசித்தர் அற்புதமான ஆனிமாதம் திருவாதிரை நட்சத்திரம் கூடிய நன்னாளில் முருகப்பெருமானின் வலப்பக்கத்தில் சிவயோக சமாதி அடைந்தார்.

### ஸ்ரீ சிவஞானி

ஸ்ரீபாலசித்தருக்குப் பின்னர் ஸ்ரீ சிவஞான பாலயசுவாமிகள் குருமகா சந்திதானமாக எழுந்தருளிப் பல்வேறு சித்துகளைச் செய்து மக்களிடையே வீரசைவ சமயக் கருத்துகளைப் பரப்பி வந்தார்கள். ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் காஞ்சிபுரம், சிதம்பரம், செய்யுர், நல்லாற்றூர், புதுவை,

பெருமுக்கல், பழநி, திருக்கழுக்குன்றம், பெரும்பேர் கண்டிகை, திருவண்ணாமலை, ஆகிய இடங்களில் கிளைத் திருமடங்கள் அமைத்தும் தம் சீடர்களுக்கு உபதேசம் புரிந்தும் மக்களிடையே சாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கி, நல்உபதேசங்களைச் செய்து வந்தார்கள்.

### சுவாமிகளின் அருட்செயல்கள்

#### 1. சூலைநோய் நீக்கியது

சுவாமிகள்காஞ்சியில்தங்கியிருந்தபோது அரவு தீண்டிய ஒருவரை விடம் நீக்கிய செய்தியைக் கேள்வியுற்ற நவாப் மன்னர் தம் மனைவியை வாட்டி வருத்திய சூலை நோயை நீக்கியருளுமாறு சுவாமிகளிடம் வேண்ட, ஏகாம்பரர் திருச்சந்நிதியில் உம்மால் குறைக்கப்பட்ட நித்திய நைமித் தியங்களை முன்போல நடத்தி வந்தால் இந்நோய் நீங்கும் எனக் கூறி திருநீறளித்து ஆசி வழங்கி, நோயை நீக்கி அருளினார்கள். அந்நவாபும் முன்பைவிட மிகுதியாக நிவந்தங்களுக்காக விளைநிலங்களை அளித்து, காஞ்சியில் திருமடத்தையும் கட்டிக் கொடுத்தனன்.

#### 2. மணலைச் சருக்கரையாக மாற்றியது

சிவஞானி, செய்யுரை நோக்கி யாத்திரையாக வந்தடைந்தார். அங்கு வேளாளருள் சிலர் ஒரு புதிய குடத்தில் மணலை நிறைத்துச் சுவாமிகள் முன் வைத்தனர். தம் யோக ஆற்றலால் அதை அறிந்து வெண்மணலைச் சருக்கரையாக்கி அனைவருக்கும் அளிக்கச் செய்தார். சுவாமியின் மகிமையை அறிந்த வேளாளர்கள் அவ்வூரில் மடம் ஒன்றை அமைத்துக் கொடுத்தும், விளைநிலங்களை அளித்தும் பணிந்து நின்றனர்.

#### 3. மகப்பேறு வாய்க்க அருளியது

தென்திசை யாத்திரையின்போது தையல்வேலை செய்துவந்த ஒருவருக்கு மகப்பேறு இன்மையால், அது காரணமாகச் சிவபெருமானின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் தனது வேலைப்பாட்டினால் ஒரு திரைச்சீலையை உருவாக்கி மீனாட்சியம்மையின் ஆணைப்படி ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் முன்பு வைத்து வேண்டி நின்றார். சுவாமிகள் மனமகிழ்ந்து அவ்விருவரின் மூப்பினை அகற்றி மகப்பேறு வாய்க்க அருளினார்.

#### 4. நரையை மாற்றியது

சுவாமிகள் தனது கருணைத் திறத்தால் பலருக்குத் திருநீறளித்து, கூன், குருடு, செவிடு, முடம், குடல்நோய், வெப்பு நோய், காசநோய், முதலிய நோய்களைத் தீர்த்து, மந்திரவாதிகளால் தீர்க்க இயலாத வலிய பேய் முதலியவற்றை நீக்கி, சித்துகள் பல புரிந்தார்கள். செஞ்சியை ஆண்ட திரியம்பக மகராசனின் மகளின் கூந்தல் நரையைப் போக்கித் தம் கைத்திருநீற்று மகிமையால் கருங்கூந்தல் ஆக்கினார். பொறாமை கொண்ட மாந்தரிகன் ஒருவனின் சொற்படித் திரியம்பக மன்னன் சுவாமிகளையும் மாந்தரிகனையும் நடுக்கடலில் விட்டபோது சுவாமிகள் அனைவர்க்கும்முன்கரையேறியதோடுசுறா மீனால் விழுங்கப்பட்ட மாந்தரிகனையும் மீட்டருளித் தம் சீடராக்கிக் கொண்டார். திரியம்பக மகராசன் பொம்மபுரத்தில் பெரிய திருமடத்தைக் கட்டுவித்து பல்வேறு கிராமங்களில் நிலங்களை மானியங்களாக அளித்து, சுவாமிகளின் திருவருளைப் பெற்றான்.

### சிவப்பிரகாசர்

காஞ்சிபுரத்தில் சைவ வேளாண் மரபில் தீட்சாகுருவாக விளங்கிய குமார சாமி தேசிகர் என்பாருக்கு மகனாகப் பிறந்தவர் சிவப்பிரகாசர். இவருக்கு வேலையர், கருணைப் பிரகாசர் என்னும்

இரண்டு சகோதரர்களும் ஞானாம்பிகை என்ற சகோதரியும் இருந்தனர். சிவப்பிரகாசர் சிறுவயதிலேயே மதிநுட்பமும் இறையருளும் பெற்றவராக விளங்கினார். தம் இளவல்களையும் தம்மையொத்த தமிழ்ப்புலவர்களாக விளங்கச்செய்தார். ஒருநாள்சிவப்பிரகாசர்தம் இளவல்களுடன் திருவண்ணாமலை சென்று மலைவலம் சென்றபோது மலையாய்க் காட்சிதரும் பெருமானைத் துதித்து, 100 பாடல்களைக் கொண்ட சோணசைலமாலை என்னும் நூலைப் பாடினார்.

பிறகு அங்கிருந்து பெரம்பலூரை அடுத்த துறைமங்கலம் என்னும் ஊரை அடைந்தார். அங்கு வீரசைவ நெறியைப் பின்பற்றி வந்த இலிங்காரெட்டி என்பாரால் போற்றப்பட்டுச் சில நாட்கள் அங்கேயே தங்கி இருந்தார். அப்போது சிவப்பிரகாசர் வெள்ளியம்பலத்தம்பிரானிடம் தனக்கு இலக்கணப் பாடம் கற்றுத்தர வேண்ட, தம்பிரானும் சிவப்பிரகாசருக்கு இலக்கியப் பயிற்சி உள்ளதா என்று, சோதிக்க
"**கு**" எனும் எழுத்தை முதலும் முடிவாகவும் வைத்து இடையில் "**ஊருடையான்**" எனும் சொல் வருமாறு ஒரு வெண்பா பாடுக என்றார். அவர் அவ்வாறே பாட, உங்கட்கு யான் பாடங்கூறும் ஆற்றல் உடையேன் அல்லேன் என்று பாராட்டி, இளவல்களுக்கு மட்டும் இலக்கணம் கற்பித்தார். பின்னர் வெள்ளியம்பலவாணரை இகழ்ந்து பேசிய புலவர் ஒருவரைத் தமது பாத்திறனால் உதடுஒட்டாமல் இருக்கும்படியான "**திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி**" என்னும் நூலைப்பாடி, புலவரின் செருக்கை அழித்தார்.

லிங்காரெட்டியாரின் மகன் அண்ணாமலை ரெட்டியார் என்பார் வெங்கனூரில் பழமலை நாதருக்கு ஆலயத் திருப்பணி செய்வதை அறிந்து, சுவாமிகள் அவ்வூரை அடைந்தார். அவரது வருகையால் மனம் மகிழ்ந்த அண்ணாமலை ரெட்டியார் சுவாமிகளுக்குத் திருமடம் கட்டுவித்துத் தங்க வைத்தார். அப்போது **திருவெங்கைக்கோவை, திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கை உலா, திருவெங்கை அலங்காரம்** போன்ற நூல்களைப் பாடி அருளினார். சுவாமிகளுக்கு இல்லறத்தில் நாட்டம் இன்மையால், தன் இளவல்களுக்கு மட்டும் திருமணம் செய்வித்தார். பின்னர் சுவாமிகள் சிதம்பரம் வந்து நடராசப் பெருமானைத் தரிசித்து, சிவப்பிரகாசம், சதமணிமாலை, தருக்க பரிபாஷை, நால்வர் நான்மணிமாலை ஆகிய நூல்களை இயற்றியருளினார்.

**சிவப்பிரகாசர் சிவஞான பாலய சுவாமிகளை ஞானாசிரியராக ஏற்றமை**

சிவப்பிரகாசர் காஞ்சி செல்லும் வழியில் பேரூர் சாந்தலிங்க சுவாமிகளைச் சந்தித்து, பொம்மபுரத்தில் அருளாட்சி செய்து வரும் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளைப் பற்றி அறிந்தார். சாந்தலிங்க சுவாமிகள், சிவஞானியைப் பற்றிப் பாடுக என்று வேண்டுகோள் விடுக்க, அதற்குச் சிவப்பிரகாசர், மானுடரைப் பாடேன் என மறுத்தார். அன்று இரவு புத்துப்பட்டு அய்யனாரப்பன் சந்நிதியில் சிவப்பிரகாசரும் சாந்தலிங்க சுவாமிகளும் தங்கியபோது, சிவப்பிரகாசர் கனவில் முருகப்பெருமான் சிவஞானி உருவில் எழுந்தருளி, சில விடுபுக்களை அளித்து, மலர்மாலையாகத் தொடுத்துக் கொடுக்கக் கேட்டார்.

"**சிவஞானியே முருகன் அம்சம்**" என்பதை உணர்ந்த சிவப்பிரகாசசுவாமிகள், சிவஞான பாலய சுவாமிகளைத் தன் ஞானாசிரியராக ஏற்று, அவர்மீது
**நெஞ்சுவிடுதூது, தாலாட்டு, பிள்ளைத்தமிழ், கலம்பகம், திருப்பள்ளியெழுச்சி** ஆகிய

ஐந்து நூல்களைப் பாடி, சிவஞான பாலய சுவாமிகளைத் துதித்தார்கள்.

**சிவனே சிவஞானி – சான்றுகள்**

சிவப்பிரகாசர், தாம் இயற்றிய நூல்களில் தன் ஞானாசிரியரைச் சிவனே சிவஞானியாக எழுந்தருளியுள்ளார் என்னும் கருத்தை முன்வைத்துப் பாடியுள்ளார்.

**1. கலம்பகத்தில் சிவமே சிவஞானி**

**வேவ மலரும் விழிகரந்த நின்னைமதன்**
**தேவ சிவஞான தேசிகா மேவிலன்என்**
**உள்ளம் அறிந்த ஒருநின் திருமேனிக்**
**கள்ளம் அறிந்தனன் என்கண்டு"**

**- கலம்பகம் 2**

இப்பாடலில் தவத்தில் இருந்த சிவபெருமானை மன்மதன் மலரம்பு தொடுத்து கலைத்தபோது, சிவன் தன் நெற்றிக்கண்ணால் மன்மதனை எரித்தான். அப்படிப்பட்ட நெற்றிக்கண், கண்டத்தில் உள்ள நஞ்சின் அடையாளம், கங்கை, மதி, நாகம், கரத்தில் உள்ள மான், மழு, புலித்தோலாடை போன்றவற்றை மறைத்துச் சிவபெருமான் என அறிய இயலாதவண்ணம் மறைத்திருக்கும் அருளிச் செயலைக் கள்ளம் எனக் குறிப்பிட்டு, மானிட வடிவில் குருவாக, சிவமே சிவஞானியாக எழுந்தருளியுள்ளார் எனச் சிவப்பிரகாசர் தன் ஞானாசிரியரைப் போற்றுகிறார்.

**2. பிள்ளைத்தமிழில் சிவமே சிவஞானி**

**"வாங்கு சிறுவெண் மதிக்குழவி வயங்கு முடியும் மதன்மாள"** எனவரும் பாடலில் சிவஞானியின் தலையில் பிறைச்சந்திரன் இல்லை. அதனால் தலை சிவபெருமானைக் காட்டிக் கொடுக்கவில்லை. சிவஞானி காதில் எந்த அணிகலனும் இல்லை. சங்கணிந்த காது சிவன்தான் இவர் எனக் காட்டிக் கொடுக்கவில்லை. கழுத்தில் விடம் உண்ட குறி இல்லை. எனவே கழுத்தும் காட்டிக் கொடுக்கவில்லை. கைகளில் மானும் மழுவும் இல்லாமையால் சிவனே என்பதைக் காட்டிக் கொடுக்கவில்லை. தலை முதலான உறுப்புகள் அனைத்தும் சிவனே சிவஞானி என்பதைக் காட்டிக்கொடுக்கவில்லை. ஆனால்

**"சிவஞானியின் விழிகள் மட்டும் கருணை தேங்கிக் காணப்பட்டதால் தாம்தான் சிவன் என்பதைக் காட்டிக் கொடுத்தன"** எனப் போற்றுகிறார்.

**நெஞ்சுவிடு தூதில் சிவமே சிவஞானி**

சிவன் தலையில் உள்ள பாம்பு தன்னிடம் உள்ள மாணிக்கத்தை மறைத்து வைத்திருக்கும். அதுபோலத் தலையில் உள்ள பாம்பினை மறைத்து, சிவனே சிவஞானியாகத் தோன்றி நமக்கு அருள்புரிகிறார் என்பதை நெஞ்சு விடுதூதின் மூன்றாம் கண்ணியில்,

**"காமருதன் தேசுணர்த்த வேண்டித் திருமுடிமேல் மேவிவாழ் மாசுணத்தைத் தான் ஒளித்த மாணிக்கம்"** என்று போற்றுகிறார்.

**முடிவுரை**

பல்வேறு சித்துகளை நிகழ்த்தி அனைவருக்கும் அருளாசி வழங்கி வந்த ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் பௌர்ணமி கூடிய நன்னாளில் பொம்மபுரம் திருமடத்தில் உள்ள ஒடுக்கத்தில் தம் உடலைத்திரு நீறாக்கி லிங்கமயமானார். சிவப்பிரகாச சுவாமிகள், சிவநாம

**மகிமை, இட்டலிங்க அபிஷேக மாலை, நெடுங்கழி நெடில், குறுங்கழி நெடில், நிரஞ்சனமாலை, கைத்தல மாலை, சீகாளத்தி புராணம்** போன்ற நூல்களைப் படைத்தார். பிறமொழி நூல்களான

**வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி** மற்றும் **பிரபுலிங்கலீலை** ஆகியவற்றைத் தமிழில் செய்தருளினார்.

சிவப்பிரகாச சுவாமிகள் தமது முப்பத்திரண்டு வயதில் முப்பத்துநான்கு நூல்களை இயற்றி, கடலூரை அடுத்த நல்லாற்றூரில் தம் பூத உடலை நீத்து இட்டலிங்க ஐக்கியமானார். குருவால் சீடருக்கும் சீடரால் குருவுக்கும் பெருமை சேரவேண்டும். அவ்வகையில் சிவஞானியும் சிவப்பிரகாசரும் திகழ்ந்திருந்தனர்.

**துணை நூற்பட்டியல்**

1. ஆசிரியர்கள் குழு, மயிலம் பொம்மபுர ஆதீனம் திருமட வரலாறு, மயிலம் பொம்மபர ஆதீனம், மயிலம். 2019.
2. ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் கலம்பகம், பொம்மபுர ஆதீனம் மயிலம். 2015.
3. ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள் தொகுதி1, மயிலம் பொம்மபுர ஆதீனம் 2004.